## 13

# சால்வை உங்கள் மீது விழட்டும்

## (2 இராஜாக்கள் 2)

*வாழ்வின் பல பதவிநிலைகள், அடையாளம் கண்டுகொள்ளுதல் மற்றும் அதிகாரத்துவம் ஆகியவற்றின் விசேஷித்த அடையாளங்களைக் கொண்டுள்ளன. காவலர் தமது சீருடை மற்றும் அடையாளப்பட்டியைக் கொண்டுள்ளார். அவசரகால மருத்துவ ஊர்தியை ஓட்டுபவர் பளிச்சிடும் விளக்குகளையும் அலறும் சைரனையும் கொண்ட வாகனத்தைக் கொண்டுள்ளார். மற்றவர்கள், "மேலாளர்" என்று கூறும் பட்டிகளைக் கொண்டுள்ளனர்.*

*எலியா தமது சால்வையைக் கொண்டிருந்தார். தேவன் எலியாவைக் குகையில் இருந்து வெளியே அழைத்தபோது, அந்தத் தீர்க்கதரிசி, "தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு" இருந்தார் (1 இராஜாக்கள் 19:13). எலியா தேவனுடைய அறிவுறுத்துதல்களைப் பின்பற்றி எலிசாவை அழைத்தபோது, அவர் எலியாவுக்குப் பதிலாக இருக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதற்கு ஒரு அடையாளமாக "அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்" (1 இராஜாக்கள் 19:19). பூமியில் எலியாவின் கடைசி நாளில், அவர் தமது சால்வையைச் சுருட்டி அதை ஒரு கோலாகப் பயன்படுத்தி யோர்தானின் தண்ணீரை அடித்துப் பிரித்தார் (2 இராஜாக்கள் 2:8).*

*ஒரு சால்வை என்றால் என்ன? "சால்வை"* [mantel] *என்பதற்கு ஒப்பான ஒரு வார்த்தை, குளிர் நெருப்பின் மீதான ஒரு அலமாரியைக் குறிக்கிறது,*[1] *ஆனால்* "mantel" ("l-e" *என்பவை முடிவில் உள்ள இவ்வார்த்தை) அன்றாட வார்த்தையாக இருப்பதில்லை.*[2] *ஆங்கில வார்த்தையான* "mantle" *என்பது* "cloak" *(மேலாடை) என்பதற்கான இலத்தீன் வார்த்தையில் இருந்து வந்துள்ளது. இது "கைப்பகுதிகளற்ற ஒரு தளர்வான உடை, இது வழக்கமாக மற்ற உடைகளின்மீது அணியப்படுகிறது" என்று அர்த்தப்படுகிறது.*[3] "Mantle" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள addereth என்ற எபிரெய வார்த்தை, அதையே அடிப்படையில் அர்த்தப்படுத்துகிறது. இது வழக்கமாக, மேய்ப்பனின் மேலங்கி அல்லது தோள்களைச் சுற்றி தளர்வாகப் போடப்படும் ஒன்று என்பது போன்ற ஒரு எளிய உடையாக இருந்தது. அவ்வப்போது இவ்வார்த்தை அரசரின் மேலாடை என்பது போன்ற கெம்பீரமான ஒன்றிக்குப் பயன்படுத்தப்பட்டது.*[4] *சால்வை என்பது ஒரு மாடுமேய்க்கும் பையனின் மேலாடை அல்லது ஒரு இந்தியப் போர்வை அல்லது ஒரு மெக்ஸிகரின் கம்பளிப் போர்வை அல்லது ஒரு முதிர் வயதான பெண்ணின் சால்வை என்பதோடு ஒப்பிடப்பட்டது.*

*எலியாவின் சால்வை என்பது தோல், மயிர் அல்லது முரடான பிறபொருளினால் தயாரிக்கப்பட்டதாக இருந்தது. அகசியா அனுப்பிய ஆட்கள், எலியாவை "அவன் மயிர் உடையைத் தரித்து" என்று விவரித்தனர் (2 இராஜாக்கள் 1:8), இது அவரது நபர்த்துவத்தையோ அல்லது அவரது உடைகளையோ*

குறிக்கக்கூடும். எலியா தமது சால்வையைச் சுருட்டி யோர்தானை அடித்தார் என்பதாகக் கூறும் 2 இராஜாக்கள் 2:8ல், செப்துவஜிந்த் வேதாகமம், “சால்வை” என்பதற்குப் பதிலாக “ஆட்டுத்தோல்” என்று குறிப்பிடுகிறது. எலியாவைப் பின்பற்றி பல தீர்க்கதரிசிகள், முரடான சால்வையைத் தங்கள் அடையாளப்பட்டியாக ஏற்படுத்தினர். சகரியா, “பொய்சொல்லும்படிக்கு மயிர்ப்போர்வையைப் போர்த்துக்” கொள்ளும் பொய்த்தீர்க்கதரிசியைப் பற்றிக் குறிப்பிட்டார் (சகரியா 13:4). யோவான் ஸ்நானன் “எலியாவின் ஆவியில்” (லூக்கா 1:17) வந்தபோது, அவர் ஒரு தீர்க்கதரிசியாக வந்தார் (லூக்கா 7:26), அவர் “ஒட்டக மயிராடையை” அணிந்திருந்தார் (மத்தேயு 3:3, 4). எனவே நாம், எலியாவின் சால்வையைப் பற்றி, அது விலங்கின் முடியால் செய்யப்பட்டிருந்த தளர்வான ஒரு உடையாக இருந்தது அல்லது அவரது தோள்களைச் சுற்றிப் போடப்பட்ட வேறொரு முரடான துணியாக இருந்தது என்று நினைக்கலாம்.[5]

நமது முந்திய பாடத்தில் நாம், எலியா சுழற்காற்றில் ஏறிச்சென்றபோது அவரது சால்வை எலிசாவின்[6] மீது விழுந்ததைக் கண்டோம். நாம் பின்வரும் அறைகூவலுடன் இந்தப் பாடத்தொடரை முடிப்போம்: சால்வை *உங்கள்மீது* விழட்டும்.

## தேவனுக்கு இஸ்ரவேலில் இன்னமும் அவரது ஆண்களும் பெண்களும் தேவைப்படுகின்றனர்

எலியா அதிகமானவற்றைச் சாதித்திருந்தார். எலியா காட்சிக்கு வருவதற்கு முன்னர், ஆகாபிடத்தில் யெகோவாவின் தீர்க்கதரிசிகள் தைரியமாய்ப் பேசுதல் என்பது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது (1 இராஜாக்கள் 20). யேசபேல் (தனது சொந்த நோக்கங்களுக்காக யெகோவாவின் பிரமாணங்களைப் புரட்டிய போதிலும், 1 இராஜாக்கள் 21ல் அவள் செய்தது போன்று) யெகோவாவின் பிரமாணங்கள் பற்றிக் கவலைப்படாதிருப்பாள். ஆகாபின் அரண்மனைத் தீர்க்கதரிசிகள் நானூறு பேர் யெகோவாவின் நாமத்தில், மாய்மாலமாகக் கூட ஒருக்காலும் பேசியிருக்க மாட்டார்கள் (1 இராஜாக்கள் 22:11, 12). தீர்க்கதரிசிகளின் பள்ளிகள் (2 இராஜாக்கள் 2:3, 5ஐக் காண்க) நிலவியிருக்க இயலாது. எலியாவின் முயற்சிகளின் விளைவாகக் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆகாபின் மகனான யோராம் அரியணைக்கு வந்தபோது, “தன் தகப்பன் பண்ணுவித்த பாகாலின் சிலையை அகற்றிவிட்டான்” (2 இராஜாக்கள் 3:2).

இது, ஒவ்வொரு விஷயமும் செய்யப்பட்டிருந்தது என்றோ அல்லது தேவனுக்கு விசேஷித்த பிரதிநிதியொருவர் இனியும் தேவையில்லை என்றோ அர்த்தப்படுவதில்லை. பாகாலை ஆராதித்தல் என்பது யெகூ, 2 இராஜாக்கள் 10:18-27ல் அந்தப் பாகாலை ஆராதிப்பவர்களைப் பிடித்து “இப்படியே யெகூ பாகாலை இஸ்ரவேலில் இராதபடிக்கு அழித்துப்போட்ட” வரையிலும் தொடர்ந்தது (வசனம் 28). யெரோபெயாமின் விக்கிரகாராதனை திருப்பப்படுதல் உட்பட மற்ற பொல்லாங்குகள் மேலோங்கி இருந்தன. தேவனுக்கு இன்னமும் இஸ்ரவேலில் அவரது மனிதர் தேவையாயிருந்தார்.

இன்றைய நாட்களில் தேவனுக்கு இஸ்ரவேலில் இன்னமும் அவரது ஆண்களும் பெண்களும் தேவைப்படுகின்றனர். நமக்கு முன்னதாக வந்தி

ருந்து, சத்தியத்தைப் பிரசங்கித்தலிலும் போதித்தலிலும் தங்கள் வாழ்நாளைச் செலவிட்டு, தங்கள் நாட்களின் தவறையும் அவபக்தியையும் முகமுகமாய் எதிர் கொண்டிருந்தவர்களுக்காக நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறோம். அர்கள் அதிகமானவற்றை நிறைவேற்றியுள்ளனர். கர்த்தருடைய மக்களின் சபைக்குழுமங்கள் உலகம் முழுவதிலும் காணப்பட முடிகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சுவிசேஷ ஊழியம் போன்ற மன எழுச்சி மிக்க விஷயங்களை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். யெகோவாவுக்கென்று தங்களை அர்ப்பணித்துக்கொண்ட ஆண்களையும் பெண்களையும் யெகோவா கொண்டிருக்கிறார் என்பதற்கு ஒவ்வொரு சபைக்குழுமமும் நிருபணமாக உள்ளது.

இருப்பினும் நாம், பணி முடிக்கப்பட்டுள்ளது என்று நினைக்கக்கூடாது. நம்மைச் சுற்றிலும் மற்றும் உலகம் முழுவதிலும், இன்னமும் ஆத்துமாக்கள் இருளில் உள்ளன, மற்றும் வாய்ப்புகள் நழுவிக்கொண்டிருக்கலாம். ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஊழியம் செய்யும் எனது நண்பர்கள், கம்யூனிஸமானது மிகவும் உயிர்த்துடிப்புடன் இருப்பதாகவும், அது இன்னமும் சுவிசேஷ ஊழியத்தின் கதவுகளை மூடுவதற்காகப்/பணி செய்துகொண்டிருப்பதாகவும் எனக்குக் கூறுகின்றனர்.

அமெரிக்காவிலும் இன்னம் பல நாடுகளிலும், "பாகாலை ஆராதித்தல்" என்பது இன்னமும் நம்முடன் இருக்கிறது என்பது தெளிவு. நாம், கல்லினால் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்கு முன்பாகப் பணிந்துகொள்வதில்லை, ஆனால் நாம் வளமை, அதிகாரம் மற்றும் உடமைகள் ஆகியவற்றை ஆராதிக்கிறோம். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து" என்று கூறினார் (எபிரெயர் 13:5); ஆனால் ஒவ்வொரு விளம்பரமும், ஒவ்வொரு வர்த்தக நிகழ்ச்சியும், "நீங்கள் கொண்டுள்ளவற்றைக் கொண்டு திருப்தியடைய வேண்டாம். உங்களுக்கு அதிகம், அதிகம், அதிகமாகத் தேவை!" என்று அலறுகின்றன.

நாம் கோவில் விபசாரத்தின் கண்ணியக்குறைவான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இனியும் பாகாலின் கோவில்களுக்குச் செல்வதில்லை. இப்போது இப்படிப்பட்ட செயல்கள், மிகச் சிறந்த ஹோட்டல்களிலும் "மிகநேர்த்தியான" இல்லங்களிலும் நடத்தப்படுகின்றன. பாலுறவு தொடர்பான ஒழுக்கவீனத்தில் ஈடுபடுகிறவர்கள் "தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" என்று வேதாகமம் இன்னமும் கூறுகிறது (கலாத்தியர் 5:19-21), ஆனால் ஒழுக்கவீனம் என்பது பலருக்கு வாழ்வின் வழியாகியுள்ளது. தேவனுடைய அருளிரக்கத்தினால், எய்ட்ஸ் என்ற கொள்ளைநோய், ஒரு நாடு என்று வகையில் நம்மை விழித்தெழச் செய்துள்ளது. இருப்பினும் ஒழுக்கவீனத்தில் இருந்து விலகியிருத்தல் பற்றிக் கேள்விப்படுதல் என்பதே தீர்வாக இருப்பதற்குப் பதிலாக நாம், பிள்ளைகளுக்குப் பிறப்புக் கட்டுப்பாட்டுச் சாதனங்களைக் கையளித்தல் மற்றும் "பாதுகாப்பான உடலுறவு" பற்றி அவர்களுக்குப் போதித்தல் என்பதே தீர்வாக உள்ளது என்பதைக் கேள்விப்படுகிறோம்.

நமது நாடும் பிறநாடுகளும் இருதயவலி, வேதனை மற்றும் சீர்குலைவு ஆகியவற்றினால் நிரப்பப்பட்டுள்ளது என்பதே இவையெல்லாவற்றின் விளைவாக உள்ளது. ஆயிரக்கணக்கான குடும்பங்களின் சீரழிவு என்பது மிகவும் கவலைக்குரிய விளைவுகளில் ஒன்றாக உள்ளது!

முன்பு ஒருக்காலும் இல்லாத வகையில் தேவன் இஸ்ரவேலில் தமது ஆண்கள், பெண்கள், பையன்கள் மற்றும் சிறுமிகள் ஆகியோர் தேவைப்படுபவராக இருக்கிறார். தேவனுக்காகவும் அவரது வழிக்காகவும் எழுந்து நிற்கும் மக்கள் இன்னமும் தேவனுக்குத் தேவை. தங்கள் குரல் கேட்கப்பட அனுமதிக்கும் மக்கள் தேவனுக்கு இன்னமும் தேவை. சிலுவையின் மற்ற மாபெரும் வீரர்கள் மற்றும் "இஸ்ரவேலின் தாய்மார்களில்" உண்மைநிறைந்த மற்றவர்கள் மரித்திருத்தல் பற்றிக் கேள்விப்படாமல் ஒரு வாரம் கடந்து செல்லுதல் என்பது அரிதானதாக உள்ளது. அவர்களுக்குப் பதிலாக யார் இடத்தை நிரப்புவார்? யார்?

## தேவன் ஒரு விசேஷித்த வகையிலான ஆண்களையும் பெண்களையும் பயன்படுத்தக் கூடும்

தேவனால், எவ்வகையான ஆண்களையும் பெண்களையும் பயன்படுத்த முடியும்? "தயாராக இருப்பவர்கள், மனவிருப்பமாக இருப்பவர்கள் மற்றும் பணி செய்யக்கூடியவர்களாக இருப்பவர்கள்" என்பவை ஊழியத்தைத் தொடங்க ஆவலாக உள்ள தனிநபர்களை விவரிக்க நாம் பயன்படுத்தும் வார்த்தைகளாக உள்ளன. தேவன் பயன்படுத்தக் கூடிய வகையிலான நபரைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு நாம் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவோமாக:

முதலாவது, தேவன் தம்மால் பயன்படுத்தப்படத் *தயாராக* உள்ள ஒருவரைப் பயன்படுத்த முடியும். எலியா ஊக்கமிழந்தபோது, அவரிடத்தில் தேவன், "நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போய், ... ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு" என்று கூறினார் (1 இராஜாக்கள் 19:15, 16). தேவன் தமக்காகத்தயாராகிருந்த ஒருவரைக் கொண்டிருந்தார்: எலிசா. தேவன் ஏன் அல்லது எவ்வாறு எலிசாவைத் தேர்ந்தெடுத்தார் என்பதுபற்றி நான் மிகச்சரியாக அறிந்திருப்பதில்லை. எலியா எலிசா மீது சால்வையைப் போடுவதற்கு முன்னர், எலிசா தாம் தேர்ந்துகொள்ளப்பட்டிருந்ததை அறிந்து இருந்தாரா என்பது எனக்குத் தெரியாது. எலிசா தேவனால் பயன்படுத்தப்படுவதற்குத் *தயாராக* இருந்திராவிட்டால், தேவனுடைய தேர்ந்துகொள்ளுதலும் எலியா சால்வையைப் போடுதலும் ஒன்றுமற்றதாக இருந்திருக்கும் என்பது எனக்குத் தெரியும்.

"அப்படியே அவன் [எலியா] அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போய், ... சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் கண்டான்" (1 இராஜாக்கள் 19:19அ). எலியா தம்மிடத்தில் தேவன் நியமிக்கும்படி கூறிய ஒருவரைத் தாம் கண்டுபிடிக்கும் வரை தேடினார். அவரை அவர், தாம் வளர்க்கப்பட்டிருந்த நயப்பாங்கற்ற நாட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கவில்லை, ஆனால் வளமான யோர்தான் நதிக்கரைப்பகுதியில் அவரைக் கண்டுபிடித்தார். அவர் ஒரு தோற்சுருளிலிருந்து பிரசங்கித்துக் கொண்டோ அல்லது அதைப் படித்துக்கொண்டோ இருக்கவில்லை. மாறாக எலியா தூரத்திலிருந்து முதன் முதலாக எலிசாவைக் கண்ணோக்கியபோது, அவர் "தமக்கு முன்பாகப் பன்னிரண்டு ஏர் பூட்டி உழுதுகொண்டிருப்பவராக மற்றும் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருப்பவராக" அவரைக் கண்டார் (1 இராஜாக்கள்

19:19ஆ). எலிசா ஒரு விவசாயியாக இருந்தார். அமெரிக்காவில் [சபையின்] மறுகட்டுமான இயக்கத்தின்போது பல பிரசங்கியார்கள் விவசாயிகளாக, நெற்றியின் வியர்வையின் மூலம் பொருளீட்டி, அதேவேளையில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தியவர்களாக இருந்தனர். பயன்படுத்தப்படுவதற்குத் *தயாராக இருக்கும்* எவரொருவரையும் தேவன் பயன்படுத்த முடியும்.

"எலியா அவன் இருக்கும் இடமட்டும் போய், அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்"[7] (1 இராஜாக்கள் 19:20அ). இது எலிசாவுக்கு ஒரு விநோதமான வேளையாக இருந்திருக்க வேண்டும். எலிசா எலியாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பார் என்பதில் ஐயமில்லை, ஆனால் அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்திருந்தார்கள் என்று நம்புதவற்குக் காரணம் எதுவு மில்லை. ஒருநாள் எலிசா உழுதுகொண்டிருக்கையில், கண்கள் கனல் போல இருந்த காட்டுத்தனமான மனிதர் ஒருவர் திடீரென்று தோன்றினார். அம்மனிதர் அவரை [எலிசாவை] உற்றுநோக்கி, பின்பு தமது சால்வையை - இது அவரது [எலியாவின்] தோள்களைச் சுற்றியிருந்த ஒரு முரடான துணியாக, அவர் உடலின் வேர்வையில் ஊறியதாக, அவர் பயணம் செய்திருந்த வழியில் இருந்த தூசு அப்பியதாக, இரவில் தலையணையாகப் பயன்படுத்தியதால் பழையதாகிப் போனதாக இருந்ததை - எடுத்தார் அவர் தமது சால்வையை எடுத்து, ஒரு வார்த்தையும் பேசாமல், அதை எலிசாவின் தோள்களைச் சுற்றி அணிவித்தார்.

இது எதை அர்த்தப்படுத்தியது என்று எலிசா அறிந்திருந்தார் என்பது உறுதி. ஒருவேளை தேவன் எலிசாவுக்குத் தரிசனம் கொடுத்திருக்கலாம். எலிசா, எலியாவைப் பற்றியும் அவரது சால்வையைப் பற்றியும் அறிந்திருந்தார் மற்றும் எலியாவின் சைகையின் குறிப்பை உள்ளுணர்வின் மூலம் அறிந்தார் என்பது சாத்தியமானதாக இருந்தது.

எலிசாவின் பதில்செயல் என்னவாக இருந்திருக்கும்? தேவன் தமது சித்தத்தைச் செய்யும்படி நம்மை ஒருக்காலும் கட்டாயப்படுத்துவதில்லை. அவர் நம்மைச் சுயாதீனமான ஒழுக்க முகவர்கள் என்ற வகையில் படைத்தார்; நாம் அவரால் பயன்படுத்தப்படுவதையோ அல்லது அவ்வாறு பயன்படுத்தப்படா திருப்பதையோ முடிவு செய்ய இயலும். எலிசாவின் பதில் செயல் நேர்மறை யானதாக மற்றும் உடனடியானதாக இருந்தது. "அப்பொழுது அவன் மாடு களைவிட்டு, எலியாவின் பிறகே ஓடி: நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவு கொடும், அதற்குப்பின் உம்மைப் பின்தொடர்வேன் என்றான்" (1 இராஜாக்கள் 19:20அ). நாட்டில் மக்களைத் தின்றுகொண்டிருந்த ஆவிக்குரிய புற்றுநோயானது அவரது சொந்த ஆத்துமாவைத் துக்கப்படுத்தி யிருந்தது என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. "நான் செல்லத் தயாராக இருக்கிறேன்!" என்று அவர் கூறினார். "எனது பெற்றோரிடத்தில் பிரிவு சொல்லிக் கொள்ள ஒரு நிமிடம் மாத்திரம் எனக்குக் கொடுங்கள்" என்று கூறினார்.

யாரேனும் ஒருவர், "ஒரு செயல்திறம் வாய்ந்த சீஷர், 'ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்' என்று கூறியது என் நினைவுக்கு வருகிறது; ஆனால் அவரிடத்தில் இயேசு, 'கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல' என்று கூறினாரே

என்று கூறலாம் (லூக்கா 9:61, 62). எலிசா தமது பெற்றோரை முத்தஞ்செய்ய விரும்பியதாகக் கூறியபின்பு, 'எலியா போய்த் திரும்பிவா; நான் உனக்குச் செய்ததை நினைத்துக்கொள் என்று பதில் அளித்தார்' (1 இராஜாக்கள் 19:20ஆ). இரு நிகழ்வுகளும் ஒன்று போலவே எனக்கு ஒலிக்கின்றன. எலியா செல்வதற்கு ஆயத்தமாக இருந்தார் என்பது பற்றி நான் நிச்சயமாக ஒன்றும் எண்ண முடியவில்லை!"

இவ்விரு நிகழ்வுகளிலும், இவற்றில் ஈடுபட்டவர்களின் இருதயங்கள் தாம் வேறுபாடு கொண்டுள்ளன. லூக்கா 9:57-62ல், சீஷராகவிருந்த மூன்று பேர்களின் இருதயங்களுக்குள் இயேசு கண்ணோக்கியபோது, அவர்கள் சாக்குப்போக்குகளைக் கூறினார்கள் என்பதை அவர் அறிந்தார்; அவர்கள் முழுநேர சீஷராக இருப்பதில் உள்ளடங்கிய யாவற்றிற்கும் தங்களை ஒப்புக்கொடுப்பதற்கு விருப்பம் கொண்டிருந்ததில்லை. குறிப்பாக அந்த மூவரில் இருவர், இயேசுவை உடனே பின்பற்றத் திட்டங்களைக் கொண்டிருக்கவில்லை, ஆனால் அதற்கு மாறாக எதிர்காலத்தில் திட்டவட்ட மற்ற ஒரு நேரத்தில் பின்பற்றத் திட்டம் கொண்டிருந்தனர். இதற்கு மறுபுறத்தில், எலிசா சாக்குப்போக்கு எதுவும் கொண்டிருக்கவில்லை, ஆனால் எலியாயை உடனடியாகப் பின்பற்ற அவர் தயாராக இருந்தார் என்பதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் காண்பிக்கின்றன.

தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள், எலியாவின் வார்த்தைகள் கடிந்துகொள்ளுதலாக இருக்க அவசியமில்லை என்று நாம் புரிந்துகொள்ளவும் உதவுகின்றன.[8] எலியா அனேகமாக, ஒவ்வொருவருக்கும் அவர் [எலிசா] பிரிவுசொல்லிவிட்டு விரைவில் திரும்ப அனுமதி அளித்திருக்கலாம். "நான் உனக்குச் செய்தது என்ன?" என்று கேட்டதில் எலியா, "நான் உன்னை இருக்கிற பிணைப்புகள் யாவற்றையும் நீ முறித்துக்கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை.[9] நீ என்ன செய்யப் போகிறாய் என்பதை அவர்களுக்குக் கூறு; *பின்பு* நீ என்னோடு வா என்று மறைமுகமாக உணர்த்தி இருக்கலாம்."[10]

> அப்பொழுது அவன் [எலிசா] இவனை [எலியாவை] விட்டுப்போய், [தாம் உழுதுகொண்டிருந்தவற்றில்] ஓர் ஏர்மாடுகளைப் பிடித்து [கர்மேல் மலையில் எலியா ஒரு காளையைப் பலிசெலுத்தியதைப் போன்று][11] அடித்து [மரக்கலப்பை மற்றும் கைப்பிடிகள் என்ற] ஏரின் மரமுட்டுகளால் [பலிசெலுத்தியபின் எஞ்சியிருந்த][12] அவைகளின் இறைச்சியைச் சமைத்து ஜனங்களுக்குக் கொடுத்தான்; அவர்கள் சாப்பிட்டபிற்பாடு (1 இராஜாக்கள் 19:21அ).

எலிசா தமது குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும், தாமே எல்லாவற்றையும் அளித்து, கொண்டாட்டத்தின் விருந்து ஒன்றைக் கொடுத்தார். அவரது பிழைப்புக்கு ஆதாரமாக இருந்தது முதன்மை விருந்தாயிற்று. எலிசா தமக்குப் பின்னாலிருந்த உறவுகளை துண்டித்துக் கொண்டிருந்தார். இவ்விடத்தில் நமக்கு, எபேசுவில் இருந்த மந்திரவாதிகள் தங்கள் மாயவித்தைப் புத்தகங்களை எரித்துப் போட்டது நினைவுக்கு வருகிறது (நடபடிகள் 19:19).

"பிற்பாடு, அவன் எழுந்து, எலியாவுக்குப் பின்சென்று அவனுக்கு ஊழியஞ்செய்தான்" (1 இராஜாக்கள் 19:21ஆ). எலியா தயங்கவில்லை. அவர்

*"பிரிவு" சொல்லி, பின்பு தங்கள் வலைகளைத் தயக்கமின்றி விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றிய மீனவர்களைப் போல் (மத்தேயு 4:20) எலியாவைப் பின்பற்றினார்.*

*தேவன் எலிசாவைத் தேர்ந்துகொண்டதைப் போல், தேவன் உங்களையும் தேர்ந்து கொண்டுள்ளார் - இது ஒரு மாறுபட்ட ஆனால் விசேஷித்த வழியாக உள்ளது. உங்கள் வாழ்வு, திறன்கள், மற்றும் நேரம் ஆகியவற்றைக் கொடுப்பதில், அவர் வேறெவரும் செய்ய இயலாத ஒரு ஊழியத்தைச் செய்ய உங்களைத் தகுதிப்படுத்துகிறார்.*

*"ஆனால் என்னிடத்தில் விசேஷித்த திறன்கள் எதுவும் இல்லையே"; "நான் மிகவும் இளையவனாக இருக்கிறேனே"; "நான் மிகவும் வயதானவனாக இருக்கிறேனே"; "எனது குடும்பத்தை நடத்துவதில் நான் மிகவும் பணிமும்முரமாக இருக்கிறேன்"; "கர்த்தருக்கென்று நான் செய்யக்கூடியது எதுவுமில்லையே" என்ற மறுப்புரைகளை நான் கேள்விப்பட முடிகிறது.*

*எனது மூத்த மகள் சிண்டியும் அவள் கணவர் ரிச்சர்டும் தங்கள் பிள்ளைகளை (என்னுடைய பேரப்பிள்ளைகளை!), அவர்கள் ஊழியர்களாகப் பணியாற்றும் ரோமானியாவின் பிரஸோவ் என்ற நகரில் வளர்த்துக் கொண்டுள்ளனர். அங்கு ஊழியம், பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஆனால் கர்த்தருடைய ஊழியத்தில் இருந்து ஓய்வுபெறாத கிறிஸ்துவின் சபையின் முதிர் வயது உறுப்பினர்களால் தொடங்கப்பட்டிருந்தது. அங்குள்ள இன்னொரு ஊழியக்காரி இளம்பெண்ணாகவும் திருமணம் ஆகாதவராகவும் இருக்கிறார், அவர் பல நாடுகளில் ஊழியப்பணியைச் செய்திருக்கிறார். இளைஞர் அல்லது வயது முதிர்ந்தவர், திருமணம் ஆனவர் அல்லது திருமணம் ஆகாதவர், குழந்தைகள் உள்ளவர் அல்லது குழந்தைகள் இல்லாதவர் எல்லாருக்குமே தேவனுடைய ஊழியத்தில் இடம் உள்ளது.*

*மறுப்பாளர்கள், "அது நமக்கு மிகவும் கடுமையானதாக உள்ளது! நாம் வேர்களைப் பிடுங்குதல் பற்றிப் பேசுவதில்லை! இங்கு செய்வதற்கு எங்களுக்கு ஒன்றுமில்லை என்றுதான் அர்த்தப்படுத்துகிறோம்" என்று மறுப்புத் தெரிவிக்கலாம். தமது எழுபது வயதுகளில் மிகவும் மோசமான உடல்நிலையுடன் உள்ள எனது அன்பான நண்பர்[13] ஒருவரிடத்தில் இருந்து வந்த கடிதம் ஒன்று எனக்கு முன்பாக உள்ளது. அவர் வாழ்நாள் முழுவதிலும் விசுவாசமற்ற நிலையில் இருந்தபின்பு சமீபத்தில் கர்த்தரிடமாகத் திரும்பிவந்தார். ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று நான் சபைக்குழுமத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் விசேஷித்த ஊழியம் ஒன்றைக் கண்டறியவேண்டும் என்று அறைகூவல் விடுத்தபின்பு, இந்த நண்பர் என்னிடத்தில் கவலையுடன் பேசினார். "நான் எனது ஆண்டுகள் மற்றும் எனது தாலந்துகள் எல்லாவற்றையும் வீணாக்கிவிட்டேன்" என்று அவர் கூறினார். அவர் தமது ஊழியத்தைக் கண்டறிய உதவியை விரும்பினார்; அப்படி ஒன்றிருக்கும் என்று அவர் நிச்சயப்படாதிருந்தார். இருப்பினும் அவரது சிந்தையானது இன்னமும் கூர்மையாக இருந்தது மற்றும் அவர் ஆங்கில மொழியில் நேர்த்தியான அறிவு கொண்டிருந்தார். உள்ளூர் செய்தித்தாளில் அவர் ஆசிரியருக்கு எழுதிய கடிதங்களை நான் கண்டிருந்தேன். சபை அறிக்கைக்குப் பாடங்கள் எழுதும்படியும், அவர் தமது விசேஷித்த திறமையைப் பயன்படுத்தக்கூடிய மற்ற வழிகளைப் பற்றி நினைத்துப் பார்க்கும்படியும் அவரை நான் கேட்டுக்கொண்டேன். அவர் ஆசிரியருக்குச் சமீபத்தில் எழுதிய*

“சபை நடத்துனர்கள் ஆபாசமான, சீர்கேடான மற்றும் அசிங்கமான [தொலைக்காட்சி] நிகழ்ச்சிகளுக்கு எதிராகப் போராடுதல் அவசியம்” என்று தலைப்பிடப்பட்ட கடிதமும் அத்துடன் இணைக்கப்பட்ட ஒரு குறிப்பையும் நான் இப்போதுதான் பெற்றேன் . அந்தப் பாடத்தின் கடைசிப்பத்தி, “அக்கறை கொண்ட மக்கள் என்ற வகையில் நாம் சாய்ந்து உட்கார்ந்து, [நமது நாட்டின்] அழிவைக் கவனிக்கப் போகிறோமா அல்லது இது போதும் என்று முடிவு செய்து, திரும்பிப் போராடப் போகிறோமா?” என்று தொடங்குகிறது. அந்தக் கட்டுரையானது இந்தப் பாடத்திற்கென்றே எழுதப்பட்டதாக ஒலிக்கிறது!

தேவன் என்னைப் பயன்படுத்த முடியுமா? என்பது இங்கு கேள்வியல்ல. திருப்பி ஒலிக்கும் “ஆம்!” என்பதே அதற்குப் பதிலாக உள்ளது. அவரால் பயன்படுத்தப்படுவதற்கு நீங்கள் *தயாராக இருக்கிறீர்களா?* என்பதே கேள்வியாக உள்ளது.

இரண்டாவது, தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள *மனவிருப்பம் கொண்டுள்ளவர்களைத்* தேவன் பயன்படுத்த முடியும். எலிசா தமது கட்டளையைப் பெற்றுக்கொண்டபின்பு, அவர் எலியாவுடன் பயணம் செய்தார், தமக்கு முன்பாக இருந்த ஊழியத்திற்குத் தம்மைத் தயார் செய்துகொள்வதற்காக அவர் பல ஆண்டுகள் எடுத்துக்கொண்டார் என்பது உறுதி. அவர் “துணை ஊழியர்” என்ற வகையிலோ அல்லது “உறுதிப்படுத்தப்பட்ட வாரிசு” என்ற வகையிலோ பயணம் செய்யவில்லை. அவர் ஒரு வேலைக்காரன் என்ற வகையில் பயணம் செய்தார். “பிற்பாடு, அவர் எழுந்து, எலியாவுக்குப் பின்சென்று அவனுக்கு *ஊழியஞ்[வேலை]செய்தான்*” (1 இராஜாக்கள் 19:21). 2 இராஜாக்கள் 3:11ம் வசனம், அவர் எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்தார் என்று கூறுகிறது. தேவன் நம்மைப் பயன்படுத்த வேண்டும் என்றால் நாம் மனவிருப்பம் கொண்ட ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும்.

எலிசா ஊழியம் செய்கையில், அவர் பணியிடைப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருந்தார். செயல்விளைவில் அவரிடம் எலியா, “என்னைக் கவனித்துப் பார்த்து நீ இதைச் செய்; பின்பு நீயே முயற்சி செய்” என்று கூறினார். அமெரிக்கநாடு பல ஆண்டுகளாக இவ்வகைப் பயிற்சியையே சார்ந்து இருந்தது இவ்வாறாகத்தான் மிருகங்களும் பறவைகளும் தங்கள் வாரிசுகளைப் பயிற்றுவிக்கின்றன. இதுவே அடிக்கடி மிகச்சிறப்பான பயிற்சியாக உள்ளது.

2 இராஜாக்கள் 2ல், எலிசாவுக்குத் தண்ணீர் பிரிந்ததைத் தீக்கதரிசிகளின் புத்திரர் கண்டபின்பு, அவர்கள் “எலியாவின் ஆவி எலிசாவின்மேல் இறங்கியிருக்கிறது” என்று சப்தமாகக் கூறினார்கள் (வசனம் 15). இருப்பினும் எலிசா, மிகவிரைவிலேயே எலியாவின் சால்வையை எடுத்து நதியின்மீது அடித்ததற்கு முன்பே எலியாவின் ஆவியை உள்வாங்கியிருந்தார். அவர் அக்கினியின் தீக்கதரிசியுடன் வடக்கு இராஜ்யத்தின் புழுதிபடிந்த சாலைகளில் நடந்து மலைகளில் ஏறியபோது, நாளுக்குநாள் எலியாவின் ஆவியில் பங்கேற்பவரானார். தீர்க்கதரிசியாக இருத்தல் என்றால் என்ன என்பதை அவர், திறந்த வெளியில் எலியாவுடன் நீண்ட குளிரான இரவுகளைச் செலவிடுகையில் கற்றுக்கொண்டார். நமது குடும்பங்கள் அல்லது பாய் ஸ்கவுட்டுகளுடன் மலை யேறுதல் மற்றும் முகாமிடுதல் என்பது வேடிக்கையான சாதனையாக இருக்கலாம், ஆனால் கீலேயாத்தில் இருந்து வந்த ஒரு நயப்பாங்கற்ற மனிதருடன் மலையேறுதல் மற்றும் முகாமிலிருத்தல் என்பது இன்னொரு

வரலாறாக இருக்கும். பகட்டு நடையில் எலியா நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இருப்பினும் எலிசா நீடியபொறுமையுடன் இருந்தார். சால்வையை எடுக்க வேண்டிய அவருக்கான நேரம் வந்தபோது, அவர் ஆயத்தமாக இருந்தார்.

நீங்கள் செய்வதற்கென்று தேவன் ஒரு பணியைக் கொண்டுள்ளார்; அவருடைய மகிமையைப் பயன்படுத்துவதற்கு, அவர் உங்களுக்குத் தாலந்துகளையும் திறன்களையும் கொடுத்துள்ளார் (மத்தேயு 25). இது, அவற்றைப் பயன்படுத்துதல் தானாக ஏற்படும் என்று அர்த்தப்படுவதில்லை. வாய்ப்புகள் உள்ளன, அதற்கு ஆயத்தம் தேவைப்படும் - அது தயாரிப்புக்கான பல ஆண்டுகளாக இருக்கலாம் - அப்போது அவற்றை நாம் நமது எஜமான ருக் கென்று முழுமையாகப் பயன்படுத்த முடியும்.

நான் எழுதிக்கொண்டிருந்த ஒரு பாடத்திற்காக, நிபுணத்துவம் வாய்ந்த கேளிக்கை மாயவித்தைக்காரர் ஒருவரை நான் பேட்டிகண்டேன். அந்தப் பேட்டியின்போது, அவரது மனைவி அவர்மீது சாய்ந்து, “அவர் மாயவித்தைக் காட்சிகளைச் செய்வதைப் பெரிதும் நேசிக்கிறார், ஆனால் அவர் ‘p’ வார்த்தைகளை விரும்புவதில்லை” என்று தன்னம்பிக்கையுடன் கூறினார். நான் “p” வார்த்தைகள் என்பதை என்ன என்று தயக்கத்துடன் கேட்டேன். அதற்கு அப்பெண்மணி, “Preparation [ஆயத்தப்படுதல்] மற்றும் practice [பயிற்சி]” என்று பதில் அளித்தார்.

பெரும்பான்மையான ஆயத்தப்படுதலானது வேடிக்கையாக இருப்ப தில்லை, ஆனால் ஆயத்தப்படுதலும் பயிற்சியும் இல்லாநிலையில் வாழ்வில் கொஞ்சம்தான் நிறைவேற்றப்படுகிறது. நான் கால்பந்து விளையாடுதலை நேசித்தேன், ஆனால் ஆக்லஹாமாவின் சுட்டெரிக்கும் சூரியன்கீழாக பயிற்சின் கடுமுயற்சியான நாட்களை முன்னெதிர் நோக்கவில்லை. வியர்வையும் வேதனையும் நிறைந்து எனது நுரையீரல்கள் வெடித்து விடுவதுபோன்ற உணர்வைப் பெற்றதை நான் நினைவுகூருகிறேன். நான் ஆயத்தப்படுதலை விரும்பவில்லை, ஆனால் நான் கால்பந்து விளையாட விருந்பினால், நான் ஆயத்தமாகிக்கொள்ள வேண்டியிருந்தது. நான் பிரசங்கிப்பதை நேசிக்கிறேன். தயாரித்தல் மற்றும் பயிற்சி (விசேஷ மாக மனப்பாடப்பணி) ஆகியவை பற்றி நான் மன எழுச்சி அடைவதில்லை, ஆனால் நான் கர்த்தருக்கு என்னால் இயன்ற அளவு மிகச்சிறப்பாகச் செய்ய விரும்புவதால் அதைச் செய்கிறேன்.

எலிசா செய்தது போல் செய்தல் என்பது ஆயத்தப்படுதலுக்கு மிகச்சிறப்பான வழிகளில் ஒன்றாகும்: கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர் ஒருவருடன் சாத்தியப்பட்ட அளவுக்கு மிக அதிகமான நேரத்தைச் செலவிடுங்கள், அவருக்கு அல்லது அவளுக்கு உதவ உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்யுங்கள். நீங்கள் செய்தலின் மூலம் கற்றுக்கொள்வீர்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்தல் பற்றிய எல்லாவற்றையும் நீங்கள் கற்றுக்கொள்வீர்கள்.

மூன்றாவது, முடிவுவரையிலும் *சகித்திருக்கக் கூடியவரைத்* தேவன் பயன்படுத்த முடியும். எலியா இந்தப் பூமியில் தமது கடைசி நாளை எலிசாவுடன் செலவிட்டார். கில்காலில் இருந்து பெத்தேலுக்கும் அங்கிருந்து எரிகோவுக்கும் பயணம் சென்றபின்பு, அவர்கள் யோர்தான் நதிக்கு வந்தனர். எலியா தமது சால்வையை எடுத்து, அதை முறுக்கி, தண்ணீர்மீது அடித்தார்.[14] தண்ணீர் பிரிந்தது மற்றும் அவர்கள் உலர்ந்த தரையின் வழியாகக் கடந்து சென்றார்கள்

*(2 இராஜாக்கள் 2:8).*

*அவர்கள் அக்கரைப்பட்டபோது, எலியா, "நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுமுன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன, கேள்" என்று கூறினார் (வசனம் 9அ). அவர் தம்மை உண்மையாய்ப் பின்பற்றியவருக்கு அன்பின் வெளிப்பாடாகப் பிரியாவிடைப் பரிசு ஒன்றை விட்டுச் செல்ல விருப்பம் கொண்டார். எலிசா, "உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்" என்று பதில் அளித்தார் (வசனம் 9ஆ). எலிசா, எலியாவின் ஆவிக்குரிய வாரிசாக இருக்க விரும்பினார் (உபாகமம் 21).[15] எலிசாவிடம் எலியா, தாம் எடுத்துக்கொள்ளப்படுவதை அவர் [எலிசா] கண்டால், அவரது [எலிசாவின்] வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்று கூறினார் (வசனம் 10).*

*11ம் வசனம், "அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில்," என்று தொடங்குகிறது. அவர்கள் எதைப்பற்றிப் பேசினர் என்று அறிய நீங்கள் விரும்புவீர்கள் அல்லவா? அவர்கள், எலியாவின் வாழ்வில் மாபெரும் நாட்களைப் பற்றிப் பேசினார்களா? அவர்கள், கர்மேல் மலையில் போட்டியைப் பற்றியும் மற்ற காட்சிக்குரிய நிகழ்ச்சிகளைப் பற்றியும் பேசினார்களா? ஒருவேளை அவர்கள், ஒன்றாக இருக்கும்போது நடந்திருந்த களிப்புள்ள விஷயங்களை நினைவுகூர்ந்து ஒன்றாகச் சிரித்திருக்கலாம்.*

*அவர்கள் பேசிக்கொண்டு நடக்கையில், இதோ, அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது இருப்பினும் சுழற்காற்றின் புழுதியில், எலிசா இன்னமும் எலியாவைக் காண முடிந்தது. அவர் கவனித்துக்கொண்டிருக்கையில், எலியா மேலே, மேலே, மேலே சென்று பார்வையில் இருந்து மறைந்துபோனார் (வசனம் 11ஆ)!*

*எலியா மறைந்து போகையில், மாபெரும் வருத்தத்தின் அடையாளமாக எலிசா தமது வஸ்திரத்தைப் பிடித்து இரண்டு துண்டாகக் கிழித்தான்.[16] அந்த வேளையில், எலிசா மகிழ்வைக் காட்டிலும் அதிகமாகத் துக்கத்தினால் நிறைந்திருந்தார், அது நமக்கு அன்பானவர்கள் நம்மை விட்டு எடுக்கப்படும்போது நாம் இருக்கும் நிலையைப் போலவே இருந்தது. மரணம் அடைந்தவர் உண்மையுள்ள கிறிஸ்தவராக இருந்தால், அது அவருக்கு அல்லது அவளுக்கு வெற்றியின் நேரமாக இருக்கிறது, ஆனால் நமக்கோ அது இழப்பின் நேரமாக உள்ளது. நாம் அழுகிறோம் (ஆனால் "நம்பிக்கையற்றவர்களைப் போல அழுவதில்லை").[17]*

*தூசி அமர்ந்தபோது, எலியா எடுத்துக்கொள்ளப்பட்ட இடத்திற்கு எலிசா நடந்து சென்றார். எலியாவின் சால்வை தரையில் கிடந்தது.[18] எலியாவின் மற்ற ஆடைகள் உட்பட, அவருக்கு உரிய ஒவ்வொரு பொருளும் அவருடன் மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட என்பது உறுதி. இருப்பினும் சால்வையானது பின்னால் விடப்பட்டிருந்தது. அந்தச் சால்வையைக் கண்ணோக்கிய எலிசா, திரும்பி யோர்தான் நதியைக் கண்ணோக்கிறார்.[19] அவரது மனதில் கலவரமான உணர்வுகள் ஒன்றை மற்றொன்று துரத்தியிருக்க வேண்டும்: என்னவாக இருக்கும் என்பது பற்றிய மன எழுச்சியும், என்னவாக இராது என்பது பற்றிய அக்கறையும்.*

*அவர் சால்வையை எடுத்துக்கொண்டு யோர்தான் நதியை நோக்கி நடந்தார் (வசனம் 13). அவர் சேற்றுக்குழம்பான அந்த நீரோடையைச் சென்றடைந்தபோது, அவர் அந்தச் சால்வையைச் சுருட்டித் தண்ணீரில்*

அடித்து,[20] "எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே?" என்று சப்தமிட்டார் (வசனம் 14அ). எலிசாவின் வார்த்தைகளில், தேவன் இருக்கிறார் என்பது பற்றிய சந்தேகம் எதுவும் காணப்படுவது இல்லை. அவர், "கர்த்தாவே நீர் *இங்கு* இருக்கிறீரா? நான் ஆவியின் வரத்தை இரட்டிப்பாகப் பெற்றுக் கொண்டேனா? எலியாவுக்குப் பிரிந்தது போல் தண்ணீர் எனக்குப் பிரியுமா?" என்றே கேட்டார். அது பிரிந்தது (வசனம் 14ஆ)!

தீர்க்கதரிசிகளின் புத்திரர், அனேகமாக, எரிகோவிற்கு அருகில் ஒரு உயர்ந்த இடத்தில் இருந்து, எலியா மற்றும் எலிசா ஆகியோரிடத்தில் இருந்து சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டு, நடந்ததை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தனர் (வசனம் 7). ஏதோ சில விஷயங்கள் நடந்தன என்று அவர்கள் கூற முடியும், ஆனால் அது என்னவெற்று அவர்களால் உறுதியாகக் கூற இயலாது. இருப்பினும், எலியா கிழக்கு நோக்கிச் சென்றபோது அவருக்காக யோர்தான் ஆறு பிரிந்ததையும், இப்போது எலிசா மேற்கு நோக்கிச் சென்றபோது அவருக்காக யோர்தான் ஆறு பிரிந்ததையும் அவர்கள் காண முடிந்தது. முடிவு தெளிவாகக் காணப்பட்டது.

> எரிகோவில் பார்த்துக்கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனைக் கண்டவுடனே, எலியாவின் ஆவி எலிசாவின்மேல் இறங்கியிருக்கிறது என்று சொல்லி, அவனுக்கு எதிர்கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கி (வசனம் 15).

எலியாவுக்கு மாபெரும் மரியாதையைக் காண்பித்திருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர்,[21] இப்போது எலிசாவுக்கு மரியாதை செலுத்தினர்.

எலியாவுக்கு என்ன நடந்தது என்று தீர்க்கதரிசிகளின் புத்திரர் உறுதி யாக அறியவில்லை. யாரேனும் ஒருவர், இறக்காமலேயே வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுதல் என்ற இதேபோன்ற விஷயம், இதற்கு முன்பு ஒரே ஒருமுறை மாத்திரம் நடந்திருந்தபடியால், இது எலியாவுக்கு நடந்திருந்தது என்பது அவர்கள் நம்புவதற்குக் கடினமானதாக இருந்தது. "கர்த்தருடைய ஆவியானவரால்" இங்கும் அங்கும் அற்புதவிதமாக எடுத்துச் செல்லப்படுதலில் எலியா புகழ்பெற்றவராக இருந்தார் (1 இராஜாக்கள் 18:12). அவரைத் தேவன் இன்னொரு இடத்திற்கு உயர்த்தி எடுத்துச் சென்றிருக்கலாம் என்று அவர்கள் நினைத்தனர்.[22]

> அவர்கள், "இதோ, உமது அடியோரோடே ஐம்பது பலவான்கள் இருக்கிறார்கள்; அவர்கள் போய் உம்முடைய எஜமானைத் தேடும்படி உத்தரவுகொடும்; ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் அவரை எடுத்து, பர்வதங்களில் ஒன்றின்மேலாகிலும், பள்ளத்தாக்குகளில் ஒன்றிலாகிலும் கொண்டுபோய், வைத்திருப்பார்" என்று [எலியாவிடம்] கூறினார்கள் (வசனம் 16அ).

தீர்க்கதரிசிகளின் புத்திரர் தங்களை, எலிசாவின் "அடியார்கள்" என்று அழைத்துக்கொண்டு, தேடுவதற்கு அவருடைய அனுமதியைக் கேட்டார்கள் என்பதைக் கவனியுங்கள். எலியாவைத் தேடுதல் என்பது நேரத்தை

வீணாக்குதலாக இருக்கும் என்று எலிசா அறிந்திருந்தார். முதலில் அவர் “வேண்டாம்” என்று கூறினார் (வசனம் 16ஆ). எலிசா “சலித்துப் போகு மட்டும்” (வசனம் 17அ) - அவர் தமது மறுப்பில் விடாப்பிடியாக இருக்கச் சலிக்கும் வரைக்கும் - தீர்க்கதரிசிகளின் புத்திரர் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தனர். NEB வேதாகமத்தில் “மறுப்பதற்கு இருதயம் கொண்டிராத வரையிலும்” என்றுள்ளது. கடைசியாக எலிசா, “அனுப்புங்கள்” என்று கூறினார் (வசனம் 17அ). அவர்கள் மூன்று நாட்கள் வரையிலும் தேடினார்கள் ஆனால் அவர்களால் எலியாவைக் கண்டுபிடிக்க இயலவில்லை (வசனம் 17ஆ).

அவர்களுக்காக எலிசா எரிகோவில் காத்திருந்தார். அவர்கள் திரும்பிவந்தபோது, அவர் “போகவேண்டாம் என்று நான் உங்களுக்குச் சொல்ல வில்லையா?” என்று கூறினார் (வசனம் 18). “நீங்கள் என்னை உங்கள் நடத்துனர் என்று நினைத்தால், எனது வார்த்தையை ஏற்றுக்கொள்வதற்கு நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்” என்ற மறைபொருள் இருப்பதாகக் காணப்படுகிறது.

இந்த அதிகாரத்தில் உடனடியாக இரு வரலாறுகள் தொடருகின்றன. எலியா கொண்டிருந்த, ஆசீர்வதிக்கவும் தண்டிக்கவுமான இருமடங்கு வல்லமையை அதேபோன்று எலிசா கொண்டிருந்தார் என்பதைக் காண்பிக்கவே கூறப்பட்டன என்பது உறுதி. முதலாவது வரலாறு, எரிகோவின் தண்ணீரை குடிப்பதற்கு ஏற்றதாக்கியது பற்றியதாகும். எலியா எரிகோவை விட்டுச் செல் வதற்கு முன்னர், அவரிடம் இருந்து சிலவற்றை மக்கள் விரும்பினர். தண்ணீர் கெட்டதாக இருந்தது, அது நிலத்தைப் “பாழ்நிலம்” ஆக்கக் காரணமாக இருந்தது (வசனம் 19). ஒரு புதுத்தோண்டியையும் உப்பையும் கொண்டு, எலியா அந்தத் தண்ணீரைத் தூய்மையாக்கினார் (நேரடியான அர்த்தத்தில், “ஆரோக்கிய மாக்கினார்”) (வசனங்கள் 20-22).

இரண்டாம் அதிகாரமானது, தேவனுடைய தீர்க்கதரிசியைக் கேலிசெய்த, மரியாதை இல்லாத நாற்பத்திரண்டு சிறுவர்களை - ஒரு பெரிய “தெருக் கும்பலை” - இரண்டு பெண்கரடிகள் தாக்கிய நேர்மாறான வரலாற்றுடன் முடிகிறது. எலியா வானத்திலிருந்து அக்கினியைக் கீழே வரவழைத்த போது கொண்டிருந்த அதே வல்லமையை எலிசா கொண்டிருந்தார் என்று காண்பித்தலே, இந்த வரலாற்றின் நோக்கமாக உள்ளது என்பது உறுதி. சுவிசேஷத்தைப் பற்றிக் கேலிபேசுகிற யார்மீதும் அவிழ்த்து ஏவிவிடும்படி, நாம் ஒன்றிரண்டு கரடிகளை நமது வீட்டின் பின் பகுதியில் வளர்க்க வேண்டும் என்பது இங்கு பாடமல்ல.[23] மாறாக, தேவனையும் அவரது வசனத்தையும் மதிக்குமாறு நமக்குப் போதிக்கவே இது தரப்பட்டுள்ளது.

இந்த அதிகாரம் முடிவுக்கு வருகையில், எலிசா - ஒருவேளை தமது ஆவியைப் புதுப்பித்துக் கொள்வதற்காக[24] (நாம் யாவரும் அவ்வப்போது இதைச் செய்துகொள்வது அவசியமாக உள்ளது). கர்மேல் மலைக்குச் செல்வது பற்றி நாம் வாசிக்கிறோம். பின்பு அவர் சமாரியாவுக்குத் திரும்பினார் (வசனம் 25), அங்கு அவர் ஒரு இல்லத்தைக் கொண்டிருந்தார் என்பது உறுதி (2 இராஜாக்கள் 5:3).

நாம் இந்த வசனங்களை வாசித்து, தொடரும் அதிகாரங்களை ஆய்வுசெய்கையில், இரு உண்மைகளினால் நாம் மனம் ஈர்க்கப்படுகிறோம்: (1) எலிசா, “தம்மீது சால்வை விழுந்ததைக்” கொண்டிருந்ததால் ஆசீர்வதிக்கப்பட்டார், மற்றும் (2) அவர் தம்மீது சால்வை விழுந்ததினால் ஒரு

கனமான பொறுப்பைப் பெற்றுக்கொண்டார்.

அவருக்குக் கனம் அளிக்கப்பட்டிருந்ததில் அவர் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார். தீர்க்கதரிசிகளின் புத்திரர் தங்களை அவரது அடியார்கள் என்று அழைத்துக்கொண்டு, தேடிப்பார்க்க அவரது அனுமதியை வேண்டி நின்றதை நாம் கண்டிருக்கிறோம். இந்த வடிவமைப்பு தொடர்ந்து வரும் அதிகாரங்களில் தொடருகிறது. 2 இராஜாக்கள் 4:1ல் தீர்க்கதரிசியின் புத்திரரில் ஒருவர், எலிசாவின் "அடியான்" என்று அழைக்கப்படுகிறார். 6:1, 2ல் தீர்க்கதரிசிகளின் புத்திரர் கட்டுவதற்கு எலிசாவின் அனுமதியை வேண்டினர். இந்த தீர்க்கதரிசிகள்மீது எலியா அதிகாரம் கொண்டிருந்தார் என்பதும் அந்த அதிகாரம் எலிசாவுக்கு மாற்றப்பட்டது என்பதும் உறுதி.

எலிசா கனத்த பொறுப்புகளையும் எடுத்துக்கொண்டார். அடுத்த பதினொரு அதிகாரங்கள், எலிசா செய்த மாபெரும் ஊழியத்தைப் பற்றிக் கூறுகின்றன. அந்த அதிகாரங்களில் நாம், யூதா மற்றும் இஸ்ரவேல் இராஜாக்கள் செய்தவைகளைக் காட்டிலும் அதிகமாக, எலிசா செய்தவைகளைப் பற்றி வாசிக்கிறோம். எடுத்துக்காட்டாக, 4ம் அதிகாரத்தில் எண்ணெய் அற்புதம் "தீர்க்கதரிசிக்கு அறை," அளித்த பெண்ணுக்கு ஒரு மகன் பிறந்த அற்புதம், "பானையில் சாவு," மற்றும் உண்மையைப் பல மடங்கு அதிகரிக்கப்பண்ணும் அற்புதம் ஆகியவற்றைப் பற்றி வாசிக்கிறோம். 5ம் அதிகாரம், நாகமான் குணமாகுதலைப் பற்றிக் கூறுகிறது. 6ம் அதிகாரத்தில் நாம், மிதக்கும் கோடரியின் அற்புதம் மற்றும் சீரியப்படைக்குக் கண்மயக்கம் உண்டாகுதல் பற்றிய வரலாறு ஆகியவற்றைப் பற்றிக் காணுகிறோம். 6 மற்றும் 7ம் அதிகாரங்களில், சமாரியாவில் கொடிய பஞ்சத்திற்குப் பின்பு அற்புதவிதமாக சீரியா நாட்டினர் தோல்வியடைந்தது பற்றி வாசிக்கிறோம்.

இவ்வாறாக, இவ்வரலாறு 13ம் அதிகாரத்தில் எலிசாவின் மரணம் வரையிலும் தொடருகிறது. எலிசா தேவன் பயன்படுத்தக்கூடிய நபராக இருந்தார்: அவர் முடிவுபரியந்தம் நிலைத்து நிற்கக் *கூடியவராக* இருந்தார்.

நீங்கள் தேவனுக்கு உங்களை கிடைக்கச் செய்கிறபோது, நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நீங்கள் கனத்த பொறுப்புகளையும் கொண்டிருப்பீர்கள்.[25] கர்த்தருடைய சபையில் மூப்பராக இருத்தல்[26] - அல்லது உதவிக்காரராக இருத்தல், அல்லது ஒரு போதகராக அல்லது பிரசங்கியாராக இருத்தல் அல்லது கர்த்தருக்கு இன்னொரு ஊழியக்காரராக இருத்தல் - என்பதைக் காட்டிலும் அதிகம் பயபக்திக்கு உரிய பொறுப்புகள் எதையும் என்னால் கற்பனை செய்து பார்க்க இயலவில்லை. நீங்கள் வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய விரும்பினால், நீங்கள் உங்களுடைய ஆசீர்வாதங்களை மதிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்பது மாத்திரமல்ல, ஆனால் நீங்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

நாம் முடிவுபரியந்தம் நிலைநிற்கக் கூடுமா? என்பதே, கேள்வியாக உள்ளது. இயேசு, "முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" என்று கூறினார் (மத்தேயு 10:22). அவர் "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" என்றும் கூறினார் (லூக்கா 9:62) என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

முடிவுபரியந்தம் நிலைநிற்குதல் என்பது எளிதானதல்ல. தேவன் நம்மோடு

இருப்பதாகவும் நம்மைப் பெலப்படுத்துவதாகவும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (எபிரெயர் 13:6), ஆனால் அவர் நமக்கு சுலபமான வாழ்வை வாக்குத்தத்தம் செய்திருக்கவில்லை. இஸ்ரவேலில் நீங்கள் தேவனுடைய மனிதராக, பெண்ணாக, சிறுவனாக அல்லது சிறுமியாக இருப்பதென்று நீங்கள் முடிவுசெய்தால், உங்களுக்கு நான், ஒருசில உத்தரவாதங்களைத் தரமுடியும். நீங்கள் பொறுப்புகளையும் மாபெரும் அறைகூவல்களையும் கொண்டிருப்பீர்கள் என்று நான் உத்தரவாதம் தரமுடியும். சிலவேளைகளில் இது கடினமாக இருக்கும் என்று நான் உத்தரவாதப்படுத்த முடியும். பவுல், "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று" கூறினார் (நடபடிகள் 14:22). இந்தப் பாடத் தொடரில் நான் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நேர்மையுடன் இருக்க முயற்சி செய்திருக்கிறேன்; கர்த்தருக்கு உங்கள் வாழ்வை ஒப்புவிப்பதில் உள்ளடங்கியவற்றிற்குச் சர்க்கரையால் மேல்பூச்சுப் பூச நான் முயற்சி செய்யவில்லை. தனித்து நிற்குதல் என்பது சுலபமானதல்ல. அது தனிமையைப் பெற்றுத் தரக்கூடும்.

அது சித்திரத்தின் ஒரு பக்கமாகவே உள்ளது. உங்களுக்கு - இங்கும் நித்தியத்திலும் - ஆசீர்வாதங்கள் உண்டென்று நான் உத்தரவாதப்படுத்தவும் முடியும். இப்போது நீங்கள் தேவனுடைய பிரசன்னம் மற்றும் பெலம் ஆகியவற்றைப் பெற்றிருப்பீர்கள், மற்றும் ஒருநாளிலே அவர், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று கூறுவதை நீங்கள் கேள்விப்படுவீர்கள் (மத்தேயு 25:21, 23, KJV)!

## முடிவுரை

இஸ்ரவேலில் தேவனுடைய மனிதராக அல்லது மனுஷியாக இருத்தல் என்பது ஒரு விசேஷித்த விஷயமாக உள்ளது. "அப்படிப்பட்ட நபராக இருப்பதற்கு நீங்கள் தயாராக, மனவிருப்பமாக மற்றும் திறனுள்ளவராக இருக்கவேண்டும்." தேவன் பயன்படுத்தக் கூடிய வகையிலான நபர், அவரால் பயன்படுத்தப்படத் *தயாரானவராக*, தம்மைத் ஆயத்தப்படுத்திக் கொள்ள மனவிருப்பம் *உள்ளவராக*, மற்றும் முடிவுபரியந்தம் நிலைநிற்கக்*கூடியவராக* இருக்கிறார். *நீங்கள்* தயாரனவராக, மனவிருப்பம் உள்ளவராக மற்றும் திறனுள்ளவராக இருக்கிறீர்களா? என்பதே கேள்வியாக உள்ளது. நீங்கள் உங்கள் மீது சால்வை விழுவதற்கு மனவிருப்பமாக இருக்கிறீர்களா? என்பதே கேள்வியாக உள்ளது.

எலியாவின் சால்வை[27] விசித்திர வேலைப்பாடுள்ளதாக இருக்கவில்லை. அது அழுக்கானதாக, வியர்வையில் ஊறியதாக, கிழிந்துபோனதாக இருந்திருக்கும் - ஆனால் இன்னமும் எலியா எதைச் செய்ய வேண்டும் என்று தேவன் அனுப்பினாரோ, அந்த ஊழியத்தின் அடையாளமாக இருந்தது. எலியா உங்கள் மீது சால்வையைப் போட்டிருந்தால், நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் என்று நீங்கள் உங்களைக் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள், "அந்தத் துர்நாற்றம் வீசும் பொருளை என்னை விட்டு எடுத்துப் போடுங்கள்" என்று கூறியிருப்பீர்களா? அல்லது நீங்கள், "நான் செல்லத் தயாராக இருக்கிறேன்! நான் எனது பாலங்களைத் தீவைத்துக் கொளுத்தத் தயாராக இருக்கிறேன். நான் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அப்படியெல்லாம் இருக்கத் தயாராக உள்ளேன்" என்று கூறியிருப்பீர்களா?

*தேவன் உங்களை விரும்புகிறார். முதலில் அவர், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.*[28] *பின்பு அவர், நீங்கள் செயல் துடிப்புள்ளவராக, அவருக்காகத் தைரியமாய் குரல் கொடுப்பவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். நீங்கள் தேவனுடைய சால்வையை உங்களைச் சுற்றிப் போட்டுக்கொண்டு*[29] *ஊழியம் செய்ய முன்செல்வீர்கள் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன், அதற்காக ஜெபிக்கிறேன்!*

---

*குறிப்புகள்*

[1]"Mantle" *மற்றும்* "mantel" *என்ற இரு வார்த்தைகளும் ஒரே இலத்தீன் வார்த்தையில் இருந்து வந்துள்ளன.* [2]*"இருளின் போர்வை" என்பது சிந்தைக்கு வருகிற கவித்துவச் சொற்றொடராக உள்ளது. இது இருளின் "மேல்பார்வை" அல்லது "மூடுகை"யைக் குறிக்கிறது.* [3]*Funk and Wagnalls Dictionary*, vol. 1 (1951), s.v. "mantle." [4]*யோனா 3:6. ஆகானால் களவாடப்பட்ட பாபிலோனிய சால்வை என்பது இன்னொரு உதாரணம் ஆகும் (யோசுவா 7:21, 24); இந்தச் சால்வை அனேகமாகப் பளிச்சிடும் காட்சிகொண்ட உடையாக இருக்கலாம்.* [5]*நீங்கள் சால்வையை ஒரு காட்சி உதவிப்பொருளாகப் பயன்படுத்தினால் (காண்க - "காட்சி உதவிக் குறிப்புகள்"), சால்வை என்றால் என்ன என்று கலந்துரையாடுகையில் நீங்கள் அதைக் காட்சிப்படுத்துங்கள். இப்போது அதை உங்கள் தோள்களைச் சுற்றி அணிந்துகொள்ளுங்கள்.* [6]*நாம் அறிந்துள்ள வரையில், எலியா செல்லுகையில் சால்வை நேரடியாக எலிசா என்ற நபரின்மீது விழவில்லை, ஆனால் சால் வையினால் குறிக்கப்பட்ட அதிகாரத்துவம் மற்றும் பொறுப்பு ஆகியவை அவ்வேளையில் அவர்மீது விழுந்தன. யாரேனும் ஒருவர் மீது "சால்வை விழுதல்" என்ற பொதுவான சொற்றொடரானது, எலிசாவை ஒரு தீர்க்கதரிசியாக இருக்கும்படி அழைத்தபோது, எலியா தமது சால்வையை எலிசாவின்மீது வீசியதில் இருந்து எடுக்கப்பட்டிருக்கலாம்.* [7]*நீங்கள் ஒரு சால்வையைக் காட்சி உதவியாகப் பயன்படுத்தினால், எலியாவின் செயல்களைச் சைகைகள் மூலமாக அபிநயம் செய்யுங்கள்.* [8]*அவைகள், எலியா ஒரு தீர்க்கதரிசியாவது பற்றித் தீவிரமாக இருந்தாரா இல்லையா என்பதற்குச் சோதனையாக இருந்தன என்று சிலர் நினைக்கின்றனர். இது இவ்வார்த்தைகளை, லூக்கா 9ல் இயேசு மனிதர்களிடத்தில் பேசிய வார்த்தைகளைப் போன்றதாக்கும்.* [9]*இது கர்த்தரின் முழுநேர ஊழியக்காரர் எவருக்கும் ஆழ்ந்து சிந்திப்பதற்கான ஒரு முக்கியமான கருத்தாக உள்ளது.* [10]*எலியாவின் மறைபொருளான வார்த்தைகளின் அர்த்தம் மீது மற்ற சாத்தியக்கூறுகளும் உள்ளன. பிற நல்ல விளக்கவுரைகளையும் இந்தப் புத்தகத்தில் "கவலையாக இருந்த விஷயத்தைத் தேவன் எவ்வாறு குணமாக்கினார்" என்று பாடத்தையும் காணவும்.*

[11]*"பலிசெலுத்தினார்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைகள் "கொன்றார்" என்று மாத்திரம் அர்த்தப்படலாம். ஒருவேளை எலியா அதை மாத்திரம் செய்தி ருக்கலாம்.* [12]*பெரும்பான்மையான பலிகளில், மிருகத்தின் ஒரு பகுதிமாத்திரம் பலியாகச் செலுத்தப்பட்டது. மீதம் வைக்கப்பட்ட உண்ணத் தக்க பாகமானது ஆசாரியர்களால் உண்ணப்பட்டது.* [13]*டெக்ஸாஸின் கிளெபர்ன் என்ற இடத்தில் உள்ள ஆல்லென் மோரீஸ்.* [14]*நீங்கள் காட்சி உதவியாக ஒரு சால்வையைப் பயன்படுத்தினால், எலியாவின் செயல் களைப் போல் செய்துகாண்பியுங்கள்.* [15]*மற்ற தீர்க்கதரிசிகளும் இருந்தனர் (1 இராஜாக்கள் 20, 22; 2 இராஜாக்கள் 2:3, 5, 7; முதலியன).* [16]*ஆதியாகமம் 37:29; 2 சாமுவேல் 13:19; யோபு 1:20; 2:12 முதலியன.* [17]*1 தெசலோனிக்கேயர் 4:13*ff. [18]*காட்சி உதவியாக நீங்கள் ஒரு சால்வையைப் பயன்படுத்தினால், அதைத் தரையில் வீசியெறியுங்கள்.* [19]*சால்*

வையைக் கையில் எடுத்து, அதைக் கண்ணோக்கி, உங்கள் தோள்களுக்குப் பின்னால் கண்ணோக்குங்கள். [20]காட்சி உதவியாக நீங்கள் ஒரு சால்வையைப் பயன்படுத்தினால், எலியாவின் செயலைப் போல அபிநயம் செய்யுங்கள்.

[21]அவர்கள் எலியாவுடன் நேரடியாகப் பேசுவதற்கு இதற்கு முன் தயங்கியிருந்தனர், ஆனால் அதற்கு மாறாக அவரது வேலையாளுடன் பேசி இருந்தனர் என்ற உண்மை யானது ஒரு சாட்சியமாக உள்ளது (2 இராஜாக்கள் 2:3, 5). [22]பிலிப்பு ஆவியானவரால் ஆசோத் நகருக்கு "எடுத்துக்கொண்டு போகப்"பட்டார் (நடபடிகள் 8:39, 40). [23]"நான் மிகவும் முதியவன் என்று யார் சொல்வது?" என்று தலைப்பிடப்பட்டுள்ள பாடத்தில் காணவும். [24]இது எலிசாவுக்கு மிகவும் பிரியமான ஓய்விடமாக இருந்திருப்பதாகக் காணப்படுகிறது (2 இராஜாக்கள் 4:25ஐ கவனிக்கவும்). [25]இதுவே யாக்கோபு 3:1ல் யாக்கோபு ஏற்படுத்தும் கருத்தாக உள்ளது. [26]எபிரெயர் 13:17. [27]காட்சி உதவியாக நீங்கள் ஒரு சால்வையைப் பயன்படுத்தினால், நீங்கள் பிரசங்கத்தை முடிக்கும் வேளையில், அதைக் கையில் உயர்த்திப்பிடியுங்கள். [28]ஒரு கிறிஸ்தவராவதற்கு நீங்கள், இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, இயேசுவின்மீது நீங்கள் கொண்டுள்ள விசுவாசத்தை உதடுகளினால் அறிக்கையிட்டு, பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் (தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதல்) பெற வேண்டும் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; ரோமர் 10:9, 10; நடபடிகள் 22:16). [29]காட்சி உதவியாக நீங்கள் ஒரு சால்வையைப் பயன்படுத்தினால், அதை உங்கள் தோள்களைச் சுற்றிப் போட்டுக்கொள்ளுங்கள்.

## காட்சி - உதவி குறிப்புகள்

எலியா தமது தோள்களைச் சுற்றிப் போட்டுக்கொண்டு இருந்திருக்கக் கூடிய பொருளின் வகையில் பயன்படும் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளுங்கள் அல்லது பெற்றுக்கொள்ளுங்கள். நான் ஆஸ்திரேலியாவில் இருந்து கொண்டுவந்த முரட்டு ஆட்டுத்தோல் ஒன்றை வைத்திருக்கிறேன். ஒருவேளை யாரேனும் ஒருவர் முரடான மரநிறமான பொருளில் இருந்து உங்களுக்காக ஒரு சால்வையைச் செய்துகொடுக்கலாம். இந்தப் பாடத்தின் பல்வேறு கருத்துக்களை வலியுறுத்துவதற்கு இப்பாடம் முழுவதிலும் அதைப் பயன்படுத்துங்கள் (பாடத்தில் உள்ள அடிக்குறிப்புகளைக் காணுங்கள்).

## பாட வரைகுறிப்பு

அறிமுகம்

A. வாழ்வின் பல பதவிநிலைகள், அடையாளப்படுத்துதல் மற்றும் அதிகாரத்தும் ஆகியவற்றிற்குத் தங்களின் விசேஷித்த அடையாளக்குறிகளைக் கொண்டுள்ளன. இது எலியா தீர்க்கதரிசிக்கு, அவரது சால்வை என்பதாக இருந்தது (1 இராஜாக்கள் 19:13, 19; 2 இராஜாக்கள் 2:8), இந்த சால்வையானது, தோல், மயிர் அல்லது முரடான பிற பொருளினால் செய்யப்பட்டு இருந்தது (2 இராஜாக்கள் 1:8; 2:8; சகரியா 13:4; மத்தேயு 3:3, 4).

B. நமது கடைசிப் பாடத்தில், எலியா சுழற்காற்றில் மேலே

செல்லுகையில், சால்வையானது எலிசாவின் மீது விழுந்தது. நமது பாடத்தொடரை நாம், பின்வரும் அறைகூவலுடன் முடிக்க விரும்புகிறோம்: சால்வை *உங்கள் மீது* விழட்டும்.

I. இஸ்ரவேலில் தேவனுக்கு இன்னமும் அவரது மனிதர் தேவை.

A. எலியா மேலேறிய பின்பு இஸ்ரவேலில் தேவனுக்கு இன்னமும் அவரது மனிதர் தேவைப்பட்டார்.

1. எலியா ஒரு தனிச்சிறப்பான பணியைச் செய்திருந்தார்.

a. எலியா காட்சிக்கு வருமுன்னர், யெகோவாவுக்கு உதட்டளவில்ஆராதனை செய்வதும்கூட நினைத்துப் பார்க்க இயலாததாக இருந்தது; ஆனால் அவர் வந்தபின்பு, யெகோவாவின் தீர்க்கதரிசிகள் தைரியமாகப் பேசியதை, யெகோவாவின் நாமம் பிரார்த்திக்கப்பட்டதை, மற்றும் தீர்க்கதரிசிகளின் பள்ளிகள் நிலைநாட்டப்பட்டதை நாம் காணுகிறோம்.

b. ஆகாபின் மகன்களில் ஒருவர் பாகாலின் புனிதத்தூணை அகற்றிப்போட்டார் (2 இராஜாக்கள் 3:2).

2. இது, எல்லா விஷயமும் செய்யப்பட்டிருந்தது என்று அர்த்தப்படுவதில்லை. பாகாலை ஆராதித்தல் தொடர்ந்தது (2 இராஜாக்கள் 10:18ff.) மற்றும் பிற துன்மார்க்கங்களும் மேலோங்கியிருந்தன.

B. இன்றையநாட்களில் இஸ்ரவேலில் தேவனுக்கு இன்னமும் அவரது மக்கள் தேவை.

1. கடந்த காலத்தில் அதிகம் செய்யப்பட்டுள்ளது.

a. கர்த்தருடைய சபையின் உள்ளூர் சபைக்குழுமங்கள் உலகம் முழுவதிலும் இருக்கின்றன.

b. சுவிசேஷமானது உலகின் அதிகமான பகுதிகளில் சென்றுகொண்டுள்ளது.

2. இந்தப் பணி முடிக்கப்பட்டுள்ளது என்று நாம் நினைக்கக் கூடாது.

a. ஆத்துமாக்கள் இன்னமும் இருளில் இருக்கின்றன.

b. "பாகாலை ஆராதித்தல்" என்பது இன்னமும் நம்முடன் உள்ளது: வளமை, அதிகாரம் மற்றும் உடைமைகள் ஆகியவற்றை ஆராதித்தல் (எபிரெயர் 13:5).

c. பாலுறவு ஒழுக்கவீனத்தின் சீர்கேடான செயல்கள் (கலாத்தியர் 5:19-21). ஏராளமாக உள்ளன.

d. நமது நாடானது இருதயவலி, வேதனை மற்றும் சீர்கேடு ஆகியவற்றினால் நிறைந்துள்ளது. ஆயிரக்கணக்கான இல்லங்கள் சீர்குலைந்து கொண்டிருக்கின்றன.

II. தேவன் ஒரு விசேஷித்த வகையிலான ஆண்களையும் பெண்களையும் பயன்படுத்த முடியும்.

A. தேவனால் பயன்படுத்தப்படத் *தயாராக* இருக்கும் ஒருவரை அவர் பயன்படுத்த முடியும்.

1. எலியா தமது சால்வையை எலிசாவின் மீது போட்டபோது,

*அதற்குப் பதில்செயல் செய்ய எலிசா தயாராக இருந்தார் (1 இராஜாக்கள் 19:15, 16, 19-22).*

2. *ஒரு கருத்தில், தேவன் உங்களையும் இஸ்ரவேலில் அவரது ஆணாக அல்லது பெண்ணாக இருக்கத் தேர்ந்துகொண்டிருக்கிறார். நீங்கள் உங்கள் நேரம், உங்கள் தாலந்துகள் மற்றும் உங்கள் வாழ்வு ஆகியவற்றை அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நீங்கள் அவரால் பயன்படுத்தப்படுவதற்குத் தயாராக இருக்கிறீர்களா?*

B. தம்மை ஆயத்தம் செய்ய *மனவிருப்பமாக* இருக்கும் ஒருவரைத் தேவன் பயன்படுத்த முடியும்.

1. *எலிசா தமக்குத் தெய்வீகக் கட்டளைகளைப் பெற்றுக்கொண்டபின்பு, எலியாவுடன் அவர் பயணம் செய்கையில் பல ஆண்டுகள் அவர் [எலிசா] ஒரு பயிற்சித் தீர்க்கதரிசியாக இருந்தார் (1 இராஜாக்கள் 18:21; 2 இராஜாக்கள் 3:11). இவ்வாறாக, எலியா எடுத்துக்கொள்ளப்பட்டபோது மற்றும் சால்வையானது எலிசாவின்மீது விழுந்தபோது, அவர் எலியாவின் ஊழியத்தை மேற்கொள்ளத் தயாராக இருந்தார்.*

2. *தேவன் நீங்கள் செய்வதற்கு ஒரு ஊழியத்தையும் அதைச் செய்யத் திறமையையும் உங்களுக்குக் கொடுத்துள்ளார், ஆனால் அந்த ஊழியத்தைச் செய்வதற்குத் ஆயத்தப்படுதல் அவசியமாக உள்ளது.*

C. முடிவுபரியந்தம் *நிலைத்திருக்கக் கூடிய* ஒருவரைத் தேவன் பயன்படுத்த முடியும்.

1. *எலிசா விடாமுயற்சியுள்ள ஒரு தனிநபராக இருந்தார். எலியா தமது வாழ்வின் கடைசி நாளில் அவரை [எலிசாவை] விட்டுச் செல்வதற்கு முயற்சித்த ஒவ்வொரு இடத்திலும், எலிசா விடாமுற்சியுடன் அவரோடே இருந்தார். இதன் விளைவாக எலிசா, "எலியாவின் ஆவி" அவர்மீது தங்குதல் என்ற வெகுமதியைப் பெற்றுக்கொண்டார் (2 இராஜாக்கள் 2:8-18). இருப்பினும் இதன்பின்பு அவர்களின் ஊழியத்தைத் தொடர்வதும் முடிவுபரியந்தம் நிலைத்திருப்பதும் எலிசாவுக்கு அவசியமாக இருந்தது.*

   a. *எலியாவின் சால்வை எலிசாவின்மீது விழுந்தபோது, அவர் [எலிசா] ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார். எலியாவுக்குக் காண்பிக்கப்பட்ட மரியாதை இப்போது அவருக்குக் காண்பிக்கப்பட்டது (2 இராஜாக்கள் 2:15, 16; இணைவசனங்கள் 4:1; 6:1, 2).*

   b. *தேவையில் இருந்தவர்களுக்கு உதவுவதற்கும் தேவன்மீது மரியாதை செலுத்தாதவர்களைத் தண்டிக்கவுமான கன மான பொறுப்புக்களையும் அவர் பெற்றுக்கொண்டார் (வசனங்கள் 19-25).*

2. தேவன் நம்மைப் பயன்படுத்த வேண்டும் என்றால், நாமும்கூட விடாமுயற்சி உள்ளவர்களாக இருக்கவேண்டும்.
   a. இஸ்ரவேலில் தேவனுடைய ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வகையில் நாம் - இங்கும் (எபிரெயர் 13:6) நித்தியத்திற்கும் (மத்தேயு 25:21, 23) ஆசீர்வதிக்கப்படுவோம். ஆயினும் நாம் மாபெரும் பொறுப்புக்களையும் கொண்டிருப்போம் (யாக்கோபு 3:1; எபிரெயர் 13:17; நடபடிகள் 14:22; முதலியன).
   b. நாம் முடிவுபரியந்தம் நிலைத்திருந்தால் தேவன் நம்மைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் (மத்தேயு 10:22; லூக்கா 9:62).

*முடிவுரை*

A. "தயாராக இருத்தல், மனவிருப்பம் கொண்டிருத்தல் மற்றும் திறனுடன் இருத்தல்" என்பவை தொடக்கத்தை ஏற்படுத்த ஆவலுடன் உள்ள தனிநபர்களை விவரிக்கும் வார்த்தைகளாக உள்ளன. அந்த வார்த்தைகள், தேவன் பயன்படுத்த முடிகிற வகையிலான தனிநபர்களை விவரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

B. எலியா உங்கள்மீது சால்வையைப் போட்டிருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்? "நான் செல்வதற்கு ஆயத்தமாக இருக்கிறேன்!" என்று நீங்கள் கூறியிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். சால்வையை உங்கள்மீது போட்டுக்கொண்டு, ஊழியம் செய்ய முன்செல்லுங்கள்!